# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.33/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 9 |
| Name | : திரு. பர்கத்அலி |
| Father/Husband's Name | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village | : செங்கல்பட்டு நகர காவல் நிலையம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.03.2025.

Accused absent. Petition filed online allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2022 அன்று செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் ஆஜரில் இருந்த போது மதியம் 03.00 மணியளவில் கஜா த/பெ. வெங்கடேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று குற்ற எண்.365/2022 இதச பிரிவுகள் 279, 304(எ) வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்திற்கு உள்ளே ஒரு காவல் நிலையம் உள்ளது என்றால் டிராபிக் பூத் ஒன்று வெளியில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் போலிஸ்பூத் உள்ளது என்றால் சரிதான். சம்பவம்

நடந்ததாக சொல்லப்படும் இடம் பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றாலும், கடைகள் நிறைய உள்ள பகுதி என்றாலும் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் புகார்தாரர் என்னிடம் புகார் அளிக்கவில்லையென்றாலும், இறந்த நபர் எவ்வாறு இறந்தார் என்பது யாருக்கும் தெரியாது என்றாலும், இறந்த நபருக்கு நஷ்டஈடு பெற்று தரவேண்டி இந்த முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.